உ
சிவமயம்



ஏழாலை மேற்கு

## திரு. வைரமுத்து விஸ்வலிங்கம்

அவர்களின்

அமரத்துவம் குறிக்கும்

# நினைவு மலர்

**03-06-1984**

உ
சிவமயம்

ஏழாலை மேற்கு

இளைப்பாறிய நீர்ப்பாசன ஓவசியர்

# திரு. வைரமுத்து விஸ்வலிங்கம்

அவர்களின்

அமரத்துவம் குறிக்கும்

# நினைவு மலர்

* * *

**03-06-1984**

# வைரமுத்து விஸ்வலிங்கம்

வருவார் வந்து வீட்டுப் படியேறு முன்னமே, 'வாருங்கோ' 'வாருங்கோ' என்று மகிழ்ந்தழைத்துக் குழைந்து நிற்கும் சுபாவம், வந்த தேவை என்ன என்று அறிய ஆவலோடு எதிர்நோக்கி நிற்கும் தாராளம், சுவாமிக்கு ஆதனம், அர்க்கியம், பாத்தியம், ஆசமனியம் கொடுக்கும் பரிவுள்ள அர்ச்சகரை நினைவிக்குமாப்போல், வந்தவர்க்கு ஆசனம், அவர் பருகப் புகைக்க ஏதாவது கொடுப்பதில் விரையும் ஆர்வம், வழிதெருவில் போக்குவரத்தில் எவரைச் சந்திக்கும் போதிலும் சிரித்து முகம் மலர்ந்து சிரிக்கும் உபசரணைப்பொலிவு, எந்நேரமும் தன்னிறைவுள்ளவராய்த் தோற்றமளிக்குந் தாராளம் — இத்தனையும் தன் ஞாபகங்களாக இங்கு விட்டுவைத்திருப்பவர் திருவாளர் வைரமுத்து – விஸ்வலிங்கம்.

ஏதேனும் விஷயார்த்தமாக அவரைத் தேடிச் செல்பவர் கருதிய காரியம் கைகூடாதபோதும் மனநிறைவுக்குக் குறைவில்லாத வகையில் தாராளமாய்த் திரும்ப வைப்பது விஸ்வலிங்கத்தாரின் அன்பாசார உபசரணையின் சிறப்பம்சமாயிருக்கும்.


வலி — மேற்கு துணைவியம்பதியில் நல்வாழ்வு வாழ்ந்த வைரமுத்து தம்பதிகளின் மக்கள் எழுவருள் இரண்டாவது புத்திரனாய் ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதின்மூன்று ஆனி 7ஆம் திகதி அவதரித்

நவர் திரு. விஸ்வலிங்கம். துணைவி ஆரம்பப் பாடசாலையிலும் வட்டுக்கோட்டை செமினரிக் கல்லூரியிலும் முறையே கற்றுத்தேறி உரிய பருவத்தில் இலங்கை நீர்ப்பாசன இலாக்கா உத்தியோகஸ்தராய்ப் பதிவு பெற்று உத்தியோகம் புரிந்தவர் திரு. விஸ்வலிங்கம். தமக்கியல்பான அன்பாசார அநுசரணைப் பண்புகளினுல், உடனுத்தியோகஸ்தரும், மேலதிகாரிகளும், தொடர்புள்ள மற்றும் அரசாங்க இலாக்கா அலுவலர்களுமாகிய எல்லார் நட்பும், உறவும், செறிவுஞ் செழிக்க உத்தியோக வாழ்வில் அமைதியும் இன்பமுங் கொண்டிருந்தவர். இவ்வகையிற் பெற்றிருந்த செல்வாக்கின் விளைவாக அவர் தம் உடன்சகோதரங்கள்போல் சம்பந்தப் பட்ட ஏனையரும் தம் வாழ்வியல் நலன்களுக்கு அவராற் பெற்ற உதவிகளும் பல.

1942 - தை இல், ஏழாலை மேற்கைச் சேர்ந்த கந்தப்பிள்ளை உபாத்தியாயரின் மூத்தபுதல்வி, இராமநாதன் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் பயிற்றப்பட்ட ஆசிரியையாகத் தேர்ச்சி பெற்றிருந்த திருமதி. தங்கம்மாவை இவர் வாழ்க்கைத் துணையாகக் கொண்டது இவர் வாழ்வில் அதிர்ஷ்டகரமான ஒரு திருப்புமுனையாயிற்று. அன்பும் பண்புங் கனிந்த தாம்பத்தியவாழ்வில் இன்புற்று மனோரஞ்சிதராணி, பாலஸ்காந்தன், மனோரமா, சந்திரகாந்தன் என்னும் மக்கள் நால்வரைப் பெற்று வளர்த்துப் பேருக்கி வாழ்க்கைப் பலன் கண்டவர் விஸ்வலிங்கத்தார்.

# வைரமுத்து விஸ்வலிங்கம்

(இளைப்பாறிய நீர்ப்பாசன ஓவசியர்)



## திதி நிர்ணய வெண்பா

ஏரா ரிரத்தாக்ஷி யெய்துமதி சித்திரையில்
சீரார் சதுர்த்தித் திதியன்றே — பேராரும்
வைரமுத்து விஸ்வலிங்கம் வாழ்வுதறி யீசனருள்
மெய்விரவு பேருர் தினம்.

தோற்றம்:
07-06-1914

மறைவு:
04-05-1984

மனைவியும் ஆசிரியத்தொழில் மேற்கொண்டிருந்தமையால் அமைந்த நிதானமான வருவாய் காரணமாகக் குறைபாடற்ற சுமாரான குடும்ப வாழ்வுச் செழிப்பு இவருக்கு வாய்ப்பதாயிற்று.

வாழ்க்கைக் கஷ்டமறியாத செல்லப்பிள்ளை போல் பெரும்பாலுங் காட்சியளிப்பார். சாமானிய தேவைநிலைக்குமேல் அதிகம் ஆசைப்படும் சுபாவமுமில்லை. தன் சொந்தப் பொறுப்புகளின் பேரிலும் அவசரப்பட்டு அதிகம் அலட்டித் தலையுடைத்துக் கொள்ளும் அவதியும் இல்லை. எல்லாம் நடக்கவேண்டியபடி ஏதோ நடக்கும் என்ற திருப்தி இருக்கும்.

மகள் மனோரஞ்சிதராணி கந்தானையில் வியாபார நிலையமொன்றின் உரிமையாளராயிருந்த, ஏழாலை மேற்கு கந்தையா - யோகலிங்கத்தை மணந்து நான்கு பிள்ளைகளுடன் சீர்சிறப்பாய் வாழ்ந்து வருகின்றார்.

அவர் திருப்திக்கேற்றாற்போல் மூத்தமகன் பாலஸ்காந்தன் தன் படிப்பு முடித்துச் சுயமாகத் தொழில்புரியும் ஊக்கத்தால் தன் சிறியதகப்பனார் பாலசிங்கம் ஆதரவில் கற்சிலைமடுவில் கமச்செய்கைக் காணிபெற்றுக் கமமும், வியாபாரமும் நிகழ்த்திக் காரைநகர் பரமநாதன் - தனபாக்கியத்தை மணந்து நல்வாழ்வில் இயைந்துள்ளார்.

இரண்டாவது மகள் மனோரமா க. பொ. த. உயர்தரவகுப்பு வரை கற்றுத்தேறி மாவிட்டபுரத்திலுள்ள குஷிபா நிறுவனத்திற் பணியாற்றி வருகின்றார்.

இளையபுதல்வன் சந்திரகாந்தன் மேற்கு ஜேர்மனியில் தொழில் பார்த்து வருகின்ருர்.

விஸ்வலிங்கத்தாரின் வாழ்க்கை இளைப்பாறுங் காலம்வரை வவனியாப் பகுதியில் நிகழ்ந்தது. இளைப்பாறுங்காலத்தில் மனைவியார் கற்சிலைமடு அரசினர் வித்தியாசாலைக்கு இடமாற்றலானமையால் சிலவருடம் கற்சிலைமடுவிலேயே அவர் வாழ்க்கை இடம்பெற்றது. மீள, மனைவியார் ஏழாலை சைவமகாஜனவுக்கு இடமாற்றலாகியமையால் பிற்காலம் ஏழாலையே வாழ்விடமாயிற்று.

மூத்தமகளுக்கு வீடுகட்டி நிறைவேற்றும் கைங்கரியம் இக்காலத்தில் நிறைவுற்று, மருமகனும் இங்கேயே தொழில் பார்க்கும் நிலைமை உருவாகிப் பிள்ளைகள் பேரப்பிள்ளைகளைப் பராமரித்து மேற்பார்க்கும் பராக்கில் விஸ்வலிங்கத்தார் பெரும்பாலும் சந்தோஷ சுகசீவியாகவேயிருந்து வந்தார்.

கடந்த ஒருவருடகாலமாக எரிவுமயமான ஒருவகை நெஞ்சுநோய் தாக்கியதால் மருந்தும் பத்தியமுமாய் ஒருவகையில் அமைதிக் குறைவான வாழ்க்கையிலீடுபட்டிருந்தார். இறுதிவாரத்தில் அந்நோய் சற்று அதிகரிப்பாய்க் காணப்பட்டுச் சுன்னுகம் விக்னேஸ்வரா மருந்தகத்திற் பரிசோதிப்பித்துக் கொண்டு தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் தங்கி வைத்தியஞ் செய்விக்கும் நிலையில் விடப்பட்டிருந்தார்.

வைத்தியசாலையில் அநுமதிக்கப்பட்டு அடுத்த நாளே நோய் வேகந்தணிந்து போயிற்று. மூன்றும் நான்காம் நாளளவில் இனி வீட்டுக்குச் செல்லலாம் என்றநிலை இருந்தது. இருந்தும் வைத்திய ஆலோசனையின் பேரில் அங்கேயே தங்கியிருந்தார். 'எனக்கென்ன எல்லாம் சுகம். ஆனால் வீடு போக விடுகிறார்கள் இல்லை' என்ற அவர் குரல் இன்றும் எமது அகச்செவியிற் கேட்டுக்கொண்டிருக்கிறது.

4-5-84 வெள்ளிக்கிழமை ஆஸ்பத்திரியில் இராத்துணைக்குத் தங்கவென்றுசென்ற மகனிடம், இளையமகளின் கலியாணப்பேச்சு முடிந்துவிட்டதா? சந்தோஷம். அவவுக்குக் கட்ட ஆரம்பித்த வீட்டு அத்திவாரவேலை முடிந்துவிட்டதா? நல்லது. என்றெல்லாம் பேசி, 'நீ வீட்டுக்குப் போகலாம். எனக்கொன்றுமில்லை. துணைவேண்டாம்' என்று அவனைத் திருப்பியனுப்பிவிட்டார்.

அயற்கட்டிலிலிருந்த ஒரு உபாத்தியாயருடன் வெகுநேரம் கதைத்துக் கொண்டிருந்தாராம். 'கொஞ்சம் ஒருமாதிரியிருக்கிறது, படுக்கப்போகிறேன்' என்றாராம். அவ்வளவுதான், பிறகு கூப்பிட்ட உபாத்தியாயர் குரலுக்குப் பதிலேயில்லை. விஸ்வலிங்கத்தார் விஸ்வ வஸ்துவோடே ஒன்றாய் விட்டார். என்செய்வது! இப்படிக்கு அமைந்து விட்டது அவர்முடிவு.

'இழைத்தநாள் எல்லை கடவாது'

பண்டிதர் மு. கந்தையா

# மைத்துனர் விஸ்வலிங்கம்

திரு. வைரமுத்து விஸ்வலிங்கம் நமக்கு உற்ற உறவினரும் பேரன்பருமாவார். துணைவி வைரமுத்து தம்பதிகளின் புத்திரராகிய இவர் இலங்கை நீர்ப்பாசன இலாகா உத்தியோகஸ்தராகப் பத்தலக்கொட என்னும் இடத்தில் நியமனம் கிடைக்கப்பெற்று மின்னேரி, சிங்கராக்கொட, அனுராதபுரம், கந்தளாய், மன்னூர், வவுனியா ஆகிய இடங்களில் கடமையாற்றினுர். அவருடைய தமக்கையார் கமலாம்பாள் ஏழாலே மேற்கில் வேலுப்பிள்ளை உபாத்தியாயரை மணந்து இங்கேயே சிறப்பாக வாழ்ந்தவர். அவ்வகையில் விஸ்வலிங்கத்தாருக்கு ஏழாலே மேற்கு தொடர்பு ஏலவே ஏற்பட்டிருந்தது.

அவ்வகையால், எமது சிறியதகப்பனுர் கந்தப்பிள்ளை உபாத்தியாயரின் மூத்த புதல்வி தங்கம்மாவைத் திருமணம் செய்து புத்திர பௌத்திர சம்பத்துக்களுடன் சிறப்பாக வாழ்ந்தவர். ஏழாலே மேற்கில் எமது வளவுக்கு எதிர்வளவிலேயே வீடு கட்டிக் கடந்த பத்து வருடங்களாக வாழ்ந்து எமது குடும்பத்துடன் நெருங்கிய உறவு பூண்டிருந்தவர்.

பொதுவில் விஸ்வலிங்கத்தார் தாராளமானவர். எப்போதும் சந்தோஷமாயிருப்பார். எவரையும் பண்போடு அன்பாதரவாய் வரவேற்று உபசரிக்கும் பண்புள்ளவர். அவர் மனேவி, பிள்ளைகள்,

பேரப்பிள்ளைகளும் அவரைப்போலவே தாராள மானவர்கள். பெரும்பாலும் மாலைவேளைகளில் அவரைக்கண்டு அளவளாவி மகிழ்வதில் எமக்கு வெகுசந்தோஷமாய்க் கழியும்.

கடந்த 4-5-84 உடன் எங்கள் அளவளாவல் திடீரென நின்றுபோகும்படி ஆயிற்று. சில நாட்களாகப் பீடித்திருந்த இருதய சம்பந்தமான ஒருவகை எரிவுநோய் அவருக்கு யமனாகி விட்டது. இறுதிவாரத்தில் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்து அங்கு தாராளமாகவே இருந்தார். டாக்டர்களின் சிகிச்சைக்குத் தணிவதுபோல் இருந்து ஏமாற்றிவிட்ட அந்நோய் திடீரென அவரைப் பதம்பார்த்து விட்டது. என் செய்வது. விதி அதுவாயிற்று.

அவர் பிரிவால் துயருறும் அவர் மனைவி, மக்கள், பேரர், பேத்திகள், சகோதரர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அநுதாபங்கள்.

அவர் ஆன்மா சாந்தியடைக.

செ. வேலுப்பிள்ளை
இளைப்பாறிய ஆசிரியர்
எழாலை

# ஐயா!

"இன்றிருப்போர் நாளை இங்கு இருப்பதென்ன உண்மை" இந்தப்பாடல் எவ்வளவு உண்மை என்பதை உணர்ந்தேன். எவரும் எதிர்பாராதவிதமாக, எம்மைவிட்டு இறைவனடி சேர்ந்த ஐயாவின் என்னோடு பழகிய நினைவுகள் என்றும் நெஞ்சைவிட்டகலா நினைவுகள்தான்.

ஒருகணம் அவருடன் பழகிய அந்தநாட்களை நினைவுகூர்கிறேன். என்னுடன் தந்தைபோலப் பழகும்விதம், அந்தப் பாசப்பிணைப்பு, பாசஉணர்வோடு அவர்கூறும் அறிவுரைகள், என்னை நல்வழிப்படுத்தி நன்னெறிகள் கூறும் விதம், பாசமான அந்தப்பார்வை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இதைக் கடைப்பிடிக்க அவர் கூறும் கதைகள், இவையெல்லாம் என் மனத்திரையில் நிழலாடும் நீங்காத நினைவுகள்.

வாழ்வாவது மாயம், என்றே மண்ணாவது திண்ணம் என்பது நியதியே. எல்லாம் நியதிப்படியே நடக்கும். ஐயாவின் ஆத்மசாந்திக்கு எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவோமாக.

தேவன்

# புதுமை மனிதன்

அன்றுடம் நாம் சந்தித்து, உரையாடி நட்புக் கொண்டும் வருகின்றவர்கள் பல தரப்பட்ட குண நலங்கள், சுபாவங்கள் உடையவராய் இருப்பதுண்டு. எமது சகபாடியாக வாழ்ந்து திடீரெனச் சிவபதமடைந்த திரு. வைரமுத்து விஸ்வலிங்கம் என் பார்வையில் ஒரு புதுமை மனிதனுக விளங்கியவர்.

நெருங்கிய உறவினராக மட்டுமல்லாது ஒரு நல்ல ஆசிரியர் போலவும், வழிகாட்டியாகவும், மதிப்பிற்குரிய நண்பனைப்போலவும் அவர் என்னேடு வாழ்ந்தார்.

பல வருடங்கட்கு முன் நான் அவரது உத்தியோக சேவைக்காலத்தில் அவரது உதவியாளனுகச் சில காலம் பணி புரிந்திருக்கிறேன். என்னை அவர் தனது உதவியாளனுக அன்றிச் சம அந்தஸ்துப் பெற்ற சக ஊழியனுகவே மதித்தும் நடைமுறையில் அதனைச் சாதித்தும் எம் மனம் கவர்ந்தவர். இறக்கும் வரைக்கும் இம்மனப் பான்மையை அவரிடம் எம்மால் காணமுடிந்தது. தமது சொந்த வாழ்க்கை விவகாரங்களிலும், பொது அலுவல்களிலும் என்னேடு கலந்து பேசி, ஆலோசித்தும் நல்ல முடிவை மேற்கொள்வதில் எப்பொழுதும் திருப்தி காண்பவர். பெருமை, சிறுமை என்னும் மனப்பான்மை இன்றி எவருடனும் பழகும் நற்பண்பு அவரது தனித்தன்மையாகும். அன்னுரின்பிரிவால் வாடிநிற்கும் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சுற்றத்தாருடன் கலந்து பங்கேற்பதில் ஆறுதல் அடைகின்றேன். அன்னுரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம்வல்ல இறைவனிடம் இறைஞ்சுகின்றேன்.

*ஊழிய அன்பன் சபாபதி சுந்தரம்*

# இன்னும் வாராரோ அம்மப்பா

நாங்கள் :-

பிறந்து கிடந்தது
அம்மா மடியில்
வளர்ந்தது முழுதும்
அம்மப்பா மடியில்.

எங்கள் :-

அப்பா அம்மா கொழும்பு
அம்மம்மா பள்ளிக்கூடம்
சித்தி வெள்ளென வேலைக்கு
எங்களுக்கம்மா அம்மப்பா.

எப்போதும் :-

பள்ளிக்கும் கூட்டிப் போவார்
வீட்டுக்கும் மீட்டு வருவார்
சாப்பாடும் தீற்றி விடுவார்
சயனத்திலும் வளர்த்தி விடுவார்.

எங்களுக்கு :-

சட்டாம் பிள்ளை அம்மப்பா
சட்டம் என்றால் சட்டம்
திட்டமிட்டு வேலை
திரும்பவிடாமல் காவல்.

இட்டப்படியே :-

படிப்பு நேரம் படிப்பு
விளையாட்டு நேரம் விளையாட்டு
வேலை நேரம் வேலை
மாறி நடந்தால் போச்சு.

சும்மா :-

தடியை எடுப்பார்
வாயால் (தான்) அடிப்பார்
விழிகள் சிவக்கும்
வேலைகள் நடக்கும்.

லீவு நேரம்:-

குழந்தைப்பிள்ளை அம்மப்பா
கூத்துச் சிரிப்புக் கும்மாளம்
பாட்டும் கதையும் பகிடியும்
இன்னும் வராரோ அம்மப்பா.

பேரப்பிள்ளைகள்

# நீயெங்கு போனாய் பெரியப்பா

பாசக் கோயில் பெரியப்பா
பரிவின் உருவம் பெரியப்பா
நேசத்தாலே அணைத் தென்னை
நிதம் பாராட்டும் பெரியப்பா.

பத்தியமாகக் கதை சொல்லிப்
புத்தி புகட்டும் பெரியப்பா
நித்தமு மிங்கே நாங்களழ
நீயெங்கு போனாய் பெரியப்பா.

கண்ணைப் புரட்டி வெருட்டுவதும்
கனிவாய் சிரிப்பால் மருட்டுவதும்
உன்னை நினைக்க நினைக்க வென்னை
உலுப்புமப்பா பெரியப்பா.

கற்கோயில் செய்துனைப் போற்றக்
காசுபணத்துக் கேது வழி
சொற்கோயில் செய்துனைப் போற்றத்
துணிந்தேன் ஏற்பாய் பெரியப்பா.

பூமாலை மட்டுந் தொடுத்தறிவேன்
பாமாலை தொடுத்துப் பார்த்தறியேன்
என் பாமாலைக் குறை குற்றம்
எதுவும் பொறுத் தருள் பெரியப்பா.

பெருமகள் வதனி

## தேற்றம்

இல்லும் பொருளும் இருந்த மனையளவே
சொல்லும் அயலார் துடிப்பளவே — வல்ல
கிளைகுளத்து நீரளவே கேட்டியேல் நெஞ்சே
வளைகுளத்துள் ஈசனையே வாழ்த்து.

(வளைகுளம் — பழைய ஒரு சிவதலம்)

— ஐயடிகள் காடவ கோன்நாயனர் கோடித்திரத்
திருவெண்பா

உ

சிவமயம்

# திருமுறைப் பாடல்கள்

## தேவாரம்

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடி பூசிஎன் உள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனை நாட்பணிந் தேத்த அருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவ னன்றே.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணை பூட்டியோர் கடலினுட் பாய்ச்சினும்
நற்றுணை ஆவது நமச்சி வாயவே.

அரியானை அந்தணர் தம் சிந்தையானை
அருமறையில் அகத்தானை அணுவையார்க்கும்
தெரியா தத்துவனைத் தேனைப் பாலைத்
திகளொளியைத் தேவர்கள் தம் கோனை மற்றக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனகடலை குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

## திருவாசகம்

பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது இனியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிரவென் கண்கள் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கண்
மெய்யடி யார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசற்
காட்செய்மின் குழாம்புகுந்து
அண்டம் கடந்தபொருள் அளவிலதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும், இன்றும், என்றும் உள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்


கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பரவி யோம மாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



# வம்சாவளி

கணபதிப்பிள்ளை வைரமுத்து
\+
இராசம்மா

- கமலாம்பாள் + வேலுப்பிள்ளை
- விஸ்வலிங்கம் + தங்கம்மா
  - மனோரஞ்சிதராணி + யோகலிங்கம்
    - சுரேஷ்குமார்
    - ஜெயந்தி
    - சுதர்ஷன்
    - தமயந்தி
  - பாலஸ்கந்தன் + தனபாக்கியம்
  - மனோரமா
  - சந்திரகாந்தன்
- கந்தையா + புஷ்பவதி
- பாலசிங்கம் + கமலாதேவி
- த + ஆச்

கணபதிப்பிள்ளை வைரமுத்து
\+
இராசம்மா

ந்தையா + புஷ்பவதி

பாலசிங்கம் + கமலாதேவி

தளையசிங்கம் + ஆச்சிப்பிள்ளை

மனோன்மணி + மார்க்கண்டு

நேசமணி + மயில்வாகனம்

மனோரமா

சந்திரகாந்தன்

ஷன்

தமயந்தி

# நன்றி நவிலல்

எம்மை விட்டுப் பிரிந்து இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் ஈமக்கிரியை களில் நேரில் கலந்துகொண்ட உற்ருர், உறவினர், நண்பர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப் பியவர்களுக்கும், அந்தியேட்டிக் கிரியைகளிற் பங்குபற்றி அன்னுரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்த அனைவருக்கும் எங்கள் இதயபூர்வ மான நன்றியறிதலை நவில்கிருேம்.

இங்ஙனம்
மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஏழாலை மேற்கு,
ஏழாலை.
25-5-84.



மஹாத்மா அச்சகம், ஏழாலை.